# கோவை டூ லண்டன் கார் பயணம்

## 4 பெண்களின் துணிச்சல் முயற்சி

கோவை, டிச. 26–

கல்வியின் முக்கியத்துவம், பெண் ஆளுமை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், நான்கு பெண்கள், கோவையில் இருந்து, லண்டனுக்கு காரில் பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

இப்பயணம் மேற்கொள்ளும் கோவையை சேர்ந்த மீனாட்சி, 45, ருக்மணி, 49, பொள்ளாச்சியை சேர்ந்த மூகாம்பிகா, 38, ஆகியோர் கூறியதாவது:

'ரோட்டரி கோவை டெக் சிட்டி' சார்பில், பெண் ஆளுமை மற்றும் கல்வி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், கோவையில் இருந்து, லண்டனுக்கு காரில் செல்ல திட்டமிட்டுள்ளோம். எங்களுடன், மும்பையை சேர்ந்த பிரியா என்பவரும் வருகிறார்.

மார்ச் 23ல், ராமகிருஷ்ணா கல்லூரி மைதானத்தில் துவக்க விழா நடக்கிறது. இதில், பிரிட்டன் துாதரக துணை கமிஷனர் பரத்ஜோஷி, அவினாசிலிங்கம் பல்கலை வேந்தர் கிருஷ்ணகுமார் பங்கேற்கின்றனர்.

புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் வழியாக, மியான்மர், சீனா, கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், ரஷ்யா, பெல்லாரஸ், போலந்து, சுலோவாக்கியா, ஹங்கேரி, பல்கேரியா, மாசிடோனியா, செர்பியா, ஆஸ்திரியா, செக் குடியரசு, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து என, பல நாடுகள் வழியாக, இங்கிலாந்து செல்கிறோம்.

எங்கள் சாதனை பயணத்தை, 70 நாட்களில் முடிக்க திட்டமிட்டுள்ளோம். 24 நாடுகளை காரில் கடப்பதால், பல்வேறு தடைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கேற்ப, மனதளவிலும், உடலளவிலும் தயாராகி வருகிறோம்.

பயணத்தின் போது, புதுச்சேரி கவர்னர் கிரண்பேடி, குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், பாடகி உஷா உதுப் உள்ளிட்ட பல பிரபலங்கள், எங்களை நேரில் சந்தித்து ஊக்குவிக்க உள்ளனர்.



கோவை டூ லண்டனுக்கு வரும் மார்ச்சில் காரில் பயணம் செய்யவுள்ள பெண்கள்.

எங்கள் பயணத்திற்கு, பிரதமர் மோடியின், 'மேக் இன் இந்தியா' திட்டத்தை ஆதரித்து, டாடா நிறுவனத்தின் பிரத்யேக ஸ்போர்ட்ஸ் மாடல், ஹெக்சா காரை பயன்படுத்த உள்ளோம். இந்த கார், மார்க்கெட்டில் இன்னும் விற்பனைக்கு வரவில்லை.

நால்வரும் சர்வதேச ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளோம். நாங்களே டிரைவராக செயல்பட உள்ளோம். டயர் பஞ்சர் உள்ளிட்ட அடிப்படை தொழில்நுட்ப கோளாறுகளை சரி செய்ய, சிறப்பு பயிற்சி பெற்றுள்ளோம். முன்னதாக, சோதனை ஓட்டமாக, புனேயில் இருந்து, புதிய காரில் கோவை வர திட்டமிட்டுள்ளோம்.

வெளிநாடுகளுக்கு செல்ல பாஸ்போர்ட் எடுப்பதை போல், கார்களுக்கும் பாஸ்போர்ட் போன்ற ஆவணத்தை பெற வேண்டும். தவிர, பயணத்துக்காக, ஒன்பது நாடுகளில் விசா பெற்றுள்ளோம். இந்திய கார் என்பதால், வலதுபுறம் ஸ்டியரிங் இருக்கும். வெளிநாட்டு கார்களில் இடதுபுறம் இருக்கும்.

இது குறித்த தகவல், எங்கள் காரின் நான்கு புறங்களிலும் ஒட்டப்படும். இதனால், வெளிநாடுகளில் வாகனம் ஓட்டும் போது, மற்ற வாகனங்கள் சற்று கவனமாக, எங்கள் வாகனத்தை கடக்க முடியும்.

மியான்மர் மற்றும் சீனாவில் எங்கள் கார்களுக்கு முன்னும், பின்னும் ராணுவத்தினர் வாகனங்களில் பாதுகாப்புக்கு துணை வருவர். 2017, ஜூன், 2ல் இங்கிலாந்து சென்றடைய உள்ளோம். எங்களின் இந்த முயற்சிக்கு, குடும்பத்தினர் முழு ஒத்துழைப்பும், ஊக்கமும் அளித்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.